செ.வெ.எண்: 592

அரசு செய்தி வெளியீடு - 19.9.2007

மத்திய உள்துறை அமைச்சர், மாண்புமிகு திரு. சிவராஜ் பட்டீல் அவர்கள் இன்று காலை தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களை தொலைபேசி யில் தொடர்பு கொண்டு, பெங்களூரில் முதல்வரின் மகள் இல்லம் தாக்கப் பட்டது குறித்து விசாரித்ததோடு, நடைபெற்ற சம்பவத்திற்காக தனது வருத்தத்தையும் தெரிவித்து, தேவையான அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடு களும் உடனடியாக செய்யப்படும் என்று கூறினார். முதலமைச்சர் அவர்கள் நன்றி கூறியதோடு, அரசியலில் இது போன்ற நிகழ்ச்சிகளை எதிர்பார்த்துத் தான் இருப்பதாகக் கூறினார்.

இதைப் போலவே கர்நாடக மாநில உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பிரகாஷ் ராவ் அவர்களும் முதலமைச்சர் கலைஞர் அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, பெங்களூரில் நடைபெற்ற சம்பவத்திற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு, அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். முதலமைச்சர் கலைஞர் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
தலைமைச் செயலகம், சென்னை-9.